3. அரசினர் தீர்மானம்.

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பிற்பகல் 2-08 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

173. அன்னை தெரஸா மகளிர் பல்கலைக் கழகத்தின் திட்டக் குழுவிற்கு உறுப்பினர்களை பல்கலைக் கழக வேந்தர் நியமனம் செய்வது குறித்து கல்வித்துறையின் 18-12-1985-ஆம் நாளிட்ட 109925/என்.யு.1/85-1, ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1984 ஆம் ஆண்டு அன்னை தெரஸா மகளிர் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1984) 51 (2)ஆம் எண் பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

174. வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலூகாவைச் சேர்ந்த நத்தம் சிற்றூரிலுள்ள நத்தம் காலனியை தானமாக கொடுக்கப்பட்ட கிராமமாக அறிவிப்பது குறித்து ஊரசு வளர்ச்சித்துறையின் 4-7-1986-ஆம் நாளிட்ட 519ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

175. அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த நத்தம் தாலூகாவில் சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 12-8-1986 ஆம் நாளிட்ட 645ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

1986 டிசம்பர் 22]

176. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு சாராய (மொத்த விலையில் வழங்கல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 17-9-1986-ஆம் நாளிட்ட 1147-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

177. தேசிய அனுமதியின் கீழ் ஓடும் சரக்கு வண்டிகளுக்கு விதிக்கக்கூடிய வரியினை குறைப்பது குறித்து உள் (போ. 6) துறையின் 24–9–1986-ஆம் நாளிட்ட 2685ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

178. மைசூரில் நடைபெறும் தசராப் பண்டிகையை முன்னிட்டு கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்தின் பயணிகள் பேருந்துகளுக்கு தற்காலிக அனுமதி அளிப்பது குறித்து உள் (போ.6) துறையின் 29-9-1986-ஆம் நாளிட்ட 2748-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

179. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 17-9-1986-ஆம் நாளிட்ட 946-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

180. திருப்பதியில் நடைபெறும் பிரம்மோத்ஸவம் பண்டிகையை முன்னிட்டு ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் பயணிகள் பேருந்துகளுக்கு தற்காலிக அனுமதி அளிப்பது குறித்து உள் (போ.6) துறையின் 16–10–1986-ஆம் நாளிட்ட 2912-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

181. புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகாவைச் சேர்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 18–5–1986-ஆம் நாளிட்ட 761-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1958–ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ). அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

47. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு வரிவிதிப்பு (காலவரையறை பொருந்தாது என்பது) சட்டம் (தமிழ்நாடு சட்டம் எண் 43/1985) நடைமுறைக்கு வரும் தேதியினை நியமிப்பது குறித்து வணிகவரிகள்–சமய அறக்கட்டளைகள் துறையில் 27-9-1986-ஆம் நாளிட்ட 969-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

48. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 17-3-1986 முதல் 15–5–1986 முடிய உள்ள நடவடிக்கை சுருக்கக் குறிப்ட.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS